கடவுள்

பாலச்சந்திரன்.

அ[illegible]

பலே

சாமர்த்தியம்.

OFFICE OF THE REGISTRAR OF [illegible] MADRAS
20 APR 1927

BY PANDIT,
SRIMAN, ARUMUGAM.

Published by
S. M. BATCHA,
ANANDA VILAS BOOK DEPOT,
PAPANASAM.

Printed at the
[illegible] PRESS HEAD OFFICE,
[illegible]UMBAKONAM,
1926.

[illegible]yright Registered.

Price As. 3.

பாலச்சந்திரன்

பால்ய வயதும் பண சாமர்த்தியமும்.

பாலச்சந்திரன் விளையாட்டுப் பருவத்தையடைந்தவுடனே வெளியேறித் தன்னைப்போன்ற சிறுபயல்களைச் சேர்த்துக்கொண்டு விளையாட ஆரம்பித்தான். அப்போது தன்னுடைய சாமர்த்தியத்தினால் சுலபமாகக் காசு சம்பாதிக்கவேண்டுமென்னும் எண்ணம் அவனுக்குண்டாயிற்று. அதனாலவன் ஒருதினம் பல பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது அவர்களை நோக்கி "பிள்ளைகளே! உங்களுக்குக் காசு மரம் உண்டாக்கத் தெரியுமா?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "இதென்னப்பா! அதிசயமாயிருக்கிறது! காசு மரத்திலிருந்தா உண்டாகிறது? நம்முடைய வீடுகளில் துட்டுக்களை வைத்து தினந்தோறும் செலவு செய்கிறார்களே அதுதான் எங்களுக்குத் தெரியும். நாங்கள் அவர்களிடம் அழுது சண்டைபோட்டுக் கலணா அரையணா வாங்கிக்கொண்டுபோய் ஏதாவது திண்பண்டங்கள் வாங்கித் தின்கின்றோம். அவர்களிடம் காசு வாங்குவதென்றால் மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஒரு ரூபாய் அழுகை அழுதால்தான் அவர்கள் காலணா கொடுக்கிறார்கள் நீ சொல்கிறபடி மரத்தில் காசு விளைகிறதாயிருந்தால் நாம் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லையே. நினைத்தபோதெல்லாம் வேண்

டிய காசுகளை அம்மரத்திலிருந்து பறித்துக்கொள்ளலாமே. அம்மரத்தை எப்படி உண்டாக்குவது? அதை நீ சொல்வாயானால் அந்தப்படியே நமக்கு வேண்டிய காசு மரங்களை வைத்து உண்டாக்கிக் கொள்ளலாம். வீட்டில் அந்தக் காசாசைப் பிடித்த பிசாசுகளோடு சண்டை போடுவது ஒழிந்துபோகும் நீ எங்களிலெல்லாம் மகா புத்திசாலியாய் இருக்கின்றாய் எப்படி இந்த உளவை நீ கண்டுபிடித்திருக்கின்றாய். இதை சொன்னால் அந்த மரத்தில் விளையும் காசுகளில் உனக்கு அதிகப் பங்கு தருகிறோம்" என்று கூறினார்கள்.

உடனே பாலச்சந்திரன் 'பிள்ளைகளே! நான் உங்களைப்போல் தாய் தந்தையரிடத்தில் காசுகேட்டு அழுத தில்லை. நாம் காசு கேட்பானேன், அவர்கள் இரண்டு உதை கொடுப்பானேன் எனக்கோ காசுமரம் உண்டாக்கத்தெரியும் நான் அந்த மரத்தை உண்டாக்கி அதிலிருந்தே வேண்டிய காசுகளைப் பறித்துக்கொண்டு அவற்றைத் தாராளமாகச் செலவுசெய்து மிட்டாய், லட்டு, பூந்தி ஜிலேபி வடை, சுய்யம், சுண்டல் முதலிய தின்பண்டங்களையெல்லாம் வாங்கி வாங்கியுண்பேன் இதனாலேயே என்னுடம்பு நன்றாய்க் கொழுத்திருக்கிறது பாருங்கள். நீங்கள் இந்தத் தொழில் தெரியாமல் தாய் தந்தையரிடத்தில் அடிபட்டு அவதிப்படுகிறீர்கள். நான் சொன்னபடி நீங்கள் எல்லோரும் செய்வீர்களானால் நாம் எல்லோரும் சேர்ந்து அநேக காசு மரங்களை யுண்டாக்கிச் சந்தோ[illegible] காலங்கழிக்கலாம். முதலில் விதை [illegible]போடுவதற்கு நீங்கள் அதிகக் காசுகள் கொண்டுவர வேண்டும். நாம் முளைக்கப்போகும்

621,3N26

காசிற்கு ஒன்றுக்கு நாலாக மரம் உண்டாகிய பின் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் நாளையே வேண்டிய காசுகளைக் கொண்டுவரவேண்டும். உங்கள் தாய் தந்தையரிடத்தில் காசு கேட்டால் அவர்கள் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் காசுவைக்கும் இடங்களைப் பார்த்துப் பக்குவமாக நீங்கள் திருடிக்கொண்டு வந்துவிடவேண்டும். இதுதான் சுலபமான மார்க்கம். இதனை வெளியில் யாரிடத்திலும் சொல்லவுங் கூடாது. அப்படி சொல்வீர்களேயானால் இவ்வூரார் வந்து நம் காசுமரங்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போய்விடுவார்கள். காசு மரம் உண்டாக்குவதற்கு அதிககாலஞ்செல்லாது. இன்றைக்கு விதைபோட்டால் நாளைக்கே மரமுண்டாகி நமக்கு வேண்டிய காசுகளைக் கொடுக்கும். இதில் உங்களுக்குச் சந்தேகமிருந்தால் நான் இன்றைக்குக் காசு விதைப்போட்டு நாளைக்கு மரமாகப் பலன் தருவதைக் காட்டுகிறேன்'' என்று சொன்னான். இவற்றைக் கேட்டதும் அவர்கள் மிகுந்த சந்தோஷமடைந்து ''அண்ணா அந்த மரத்தில் எப்படிக் காசுகளுண்டாகும். மேலே கிளைகளில் அந்த மரம் தளிர்விட்டுப் பூத்துக் காய்க்குமா? அல்லது வேரில் வள்ளிக்கொடிபோல் கிழங்கு வைக்குமா?'' என்று கேட்டார்கள். அதற்குப் பாலசந்திரன் புன்சிரிப்புடன் ''சிநேகிதர்களே! இந்த மரம் பலன் கொடுப்பதுதான் மிகவும் விந்தை; இது மற்ற மரங்களைப்போல் மேலே பூத்துக் காய்த்துப் பழுப்பதில்லை வேரில்தான் வேர்க்கடலையைப்போல் அளவற்ற காசுகளை உற்பத்தி செய்துவிடுகின்றது. இதற்கென்றே பகவான் ஒரு அபூர்வ சக்தியைக் கொடுத்திருக்

கிறார்" என்றான். சிறுபிள்ளைகள் "அண்ணா! அப்படியானால் நீ சொன்னபடி முதலில் அந்த மரத்தை உண்டாக்கிக் காட்டு பார்க்கலாம்" என்றார்கள்.

பாலச்சந்திரன் "அப்படியே காட்டுகிறேன் வாருங்கள்" என்று அவர்களை ஆள் அண்டாத ஒரு தோட்டத்திற்குள் அழைத்துக் கொண்டுபோய் ஓரிடத்தில் மணலைத்தோண்டித் தன்னிடமிருந்த ஒரு பைசாவைப் போட்டு மேலே மணலைப் பரப்பித் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றிவிட்டு அந்தப் பயல்களை நோக்கி சகோதரர்களே! இதை யாரிடத்திலும் சொல்லாதீர்கள்; நாளை என்னுடன் சேர்ந்துவந்து இது முளைத்து மரமாகிக் காசு கொடுக்கும் விதத்தைப் பாருங்கள் என்று சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு போய்விட்டான். பின்பு எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளிற் போய்ச் சேர்ந்தார்கள் மற்ற பிள்ளைகளெல்லாம் 'நாளை விடிந்தவுடனே காசுமரத்தைப் போய்ப் பார்க்கவேண்டும்' என்று அதே சிந்தனையாய்ப் படுத்துறங்கினார்கள். அவர்களுடைய சொப்பனத்திலும் அதேசிந்தனையிருந்தது. அவர்கள் நிலைமை இப்படியிருக்க பாலச்சந்திரன் வீட்டிலிருந்து பத்து பன்னிரண்டு காசுகளை எடுத்துக் கொண்டு கோழி கூப்பிடும் நேரத்தில் எழுந்துபோய்க் காசு முளைக்கப் போட்ட தோட்டத்திற் புகுந்து, அந்தக் காசு விதைபோட்ட குழியைப் பறித்து அதிலே ஓர் அழகான செடியை வேருடன் பிடுங்கிவந்து நட்டு ஒவ்வொரு வேரிலும் நாலைந்து காசுகளைவைத்து மேலே மண்ணைத்தள்ளி மூடித் தண்ணீரை ஊற்றிவிட்டு இரக

சியமாகத் திரும்பிவந்து வீட்டிலிருந்தான். அந்தச் செடி பிடுங்கி நடப்பட்டதாயினும் அப்போது விடியற் கால நேரமாயிருந்தபடியாலும் தண்ணீர் ஊற்றப்பட்டிருந்தபடியாலும் மிகவுஞ் செழிப்புற்று உயிருள்ள செடியைப்போலவே விளங்கிக்கொண்டிருந்தது

இப்படியிருக்க, பொழுது புறப்பட்டவுடனே அந்தச் சிறுபிள்ளைகளெல்லோரும் எழுந்து கண்ணைத்துடைத்துக்கொண்டு ஆவலோடு பாலசந்திரன் வீட்டிற்கு ஓடிவந்து அவனைக்கண்டு "அண்ணு! நாம் போய்க் காசுமரத்தைப் பார்த்துவரலாம் வா" என்று கூப்பிட்டார்கள். பாலச்சந்திரன் அப்பொழுதுதான் படுக்கையைவிட்டு எழுந்திருப்பவன்போல அபிநயித்து என்ன தம்பிகளே! நீங்கள் மகா அவசரக்காரர்களாக விருக்கின்றீர்களே! மனிதன் படுக்கையைவிட்டு எழுந்திருக்கு முன்பே ஓடிவந்து தட்டி எழுப்புகின்றீர்களே! ஒரு மரம் உண்டாக்கும்போதே உங்களுக்கு இவ்வளவு ஆத்திரம் இருந்தால் இனி நாம் அநேக மரங்களை உண்டாக்கும்போது நீங்கள் எவ்வளவு ஆத்திரப்படுவீர்களோ! 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்று சொல்வது சரியாயிருக்கின்றது! உங்கள் விருப்பத்தைத் தான் கெடுப்பானேன்; சரி வாருங்கள் போகலாம் என்று அவர்களை அழைத்துக்கொண்டு அந்த தோட்டத்திற்குள் புகுந்து தான் செடி நட்டவிடத்திற் சேர்ந்து மிகவும் ஆனந்தமடைந்தவன்போலக் கையைத் தட்டிச் சிரித்துக்கொண்டு "ஆ! ஆ! நான் இதற்கு முன் காசு விதை போட்டபோது இப்படிச் செழிப்பான மரம் உண்டானதில்லை! இதைப்பாருங்கள்! எவ்வளவுசெழிப்

பாய் இருக்கின்றது" என்று சொல்லி அவர்களுக்கு அந்தச் செடியைக் காட்டினான். அவர்கள் அதைப் பார்த்தவுடனே "இதென்ன! அதிசயமாயிருக்கின்றது நாங்கள் இந்த மரம் முளைக்குமோ முளைக்காதோ என்றும் சந்தேகமாக நினைத்திருந்தோம். இதென்ன! நேற்று சாயங்காலம் நட்டதற்குள் இவ்வளவு செழித்த மரமாக உண்டாகிவிட்டதே! இதன் செழிப்பிற்குத் தக்கபடி இதில் காசும் அதிகமாயிருக்கும்" என்று பேசிக் கொண்டார்கள் பாலச்சந்திரன் அவர்களை நோக்கி "தம்பிமார்களே! நீங்கள் செடியைப் பார்த்தவுடனே இவ்வளவு அதிசயப்படுகின்றீர்கள்! இனி அதிலுண்டாகியிருக்கும் காசுகளைப் பார்த்தால் எவ்வாறு ஆச்சரியப்படுவீர்களோ" என்று சொல்லிக்கொண்டே அவர்களை அந்தச் செடியைச் சுற்றி உட்காரவைத்துத் தானும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு நாலா பக்கங்களிலுமுள்ள மண்ணைக் கொஞ்சங் கொஞ்சமாக தோண்டி யெடுத்துக்கொண்டே போனான். அந்தச் செடியின் வேர்கள் தெரிந்தவுடனே ஒவ்வொரு வேரிலும் காசுகள் அடுக்கு அடுக்காக மினுமினுத்துக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்தவுடனே பையன்களெல்லோரும் அடேயப்பா! எவ்வளவு காசு! எவ்வளவு காசு!! நேற்று நாம் ஒரு காசுபோட அநேக காசுகள் உண்டாய்விட்டனவே இந்தக் காசுகளை எடுங்கள்! எடுத்து கழுவுங்கள்! கழுவுங்கள்!! ஒரு பையில் போடுங்கள்; சீக்கிரம் வாருங்கள்! வாருங்கள்!! எல்லோரும் மிட்டாய்க் கடைக்குப் போகலாம். இனி நாம் வீட்டிற்குப்போய் அப்பத்திற்குக் காசு கேட்கவேண்

டிய வேலையில்லை. அந்தக் காசாசைபிடித்த மூதேவி கள் முகத்தில் விழிக்கவே கூடாது என்று பல வார்த் தைகளைக் கூறிச் சிறுபிள்ளைகளின் இயற்கைப்படி பே ரிரைச்சலிட்டார்கள். உடனே பாலச்சந்திரன் அவர் கள் வாயைமூடி "அடே பையித்தியக்காரர்களே! நான் உங்களுக்கு எவ்வளவோ சொல்லியும் அதை மறந்து விட்டீர்களே. நான் இந்தச் சமாச்சாரத்தை வெளி யிடக்கூடாதென்று சொல்லியிருக்க நீங்கள் இவ்வாறு கூச்சலிடுகின்றீர்களே! சிறுபிள்ளை புத்தி என்பது சரி யாயிருக்கின்றது" என்று கோபித்தான். அந்தப் பிள் ளைகள் "அண்ணா! நாங்களென்ன செய்வோம். அந்த காசுகளைப் பார்த்தவுடனே எங்களுக்கு அளவற்ற சந் தோஷம் வந்துவிட்டது? அதனால் நீ சொன்னதையும் மறந்து இரைந்து பேசிவிட்டோம். ஆனாலும் இந்தத் தப்பிதத்தை நீ பொறுத்துக்கொள்ளவேண்டும். இங் கே யாரும் இல்லை. ஆதலால் நாங்கள் பேசினது எவ ருக்குந் தெரியாது. இனி நாம் காசுகளை எடுத்துக் கொண்டு போகலாம்" என்றார்கள். இனிமேலாவது மௌனமாயிருங்கள்' என்று சொல்லிவிட்டு அந்தக் காசு களையெல்லாம் எடுத்துக் கழுவி ஒரு பையில் போட்டு வைத்துக்கொண்டான். அதன்மேல் அச் சிறுபையன் கள் அண்ணா இனி மிட்டாய்க் கடைக்குப் போகலாம் வா என்று அவனைக்கூப்பிட்டார்கள். அப்போது பாலச் சந்திரன் அவர்களை நோக்கி நீங்கள் செய்வது பைத் தியக்காரத்தனமான யோஜனை. முதல் முதலுண்டான காசுகளை நாம் செலவு செய்துவிடக்கூடாது. இதை ஒரு நாளைக்கு சுவாமிக்கு உபயோகப்படுத்தவேண்டும்.

இலை நீங்கள் வீட்டில் அதிகக் காசுகளைத் திருடி எடுத்துக்கொண்டு வாருங்கள். இன்று சாயங்காலமே உங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மரம் உண்டாக்கிவிடலாம். நாளை ஒவ்வொரு பையனுக்கும் அளவற்ற காசு கையிலிருக்கும். இன்னும் இதில் ஒரு தந்திரம் இருக்கின்றது. மரம் முளைப்பதற்கு ஒரு காசுதான் போடவேண்டுமென்று நீங்கள் நினைக்காதீர்கள். நாம் அநேக காசுகளைச் சேர்த்து ஒரு குழியில் போடலாம். எவ்வளவுக்கெவ்வளவு விதைக் காசுகள் அதிகமாகப் போடுகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமான காசுகள் மரத்தில் விளையும். நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு காசுகள் அகப்பட்டாலும் அவ்வளவையும் சுருட்டிக்கொண்டு வந்துவிடுங்கள் அவரவர் கொண்டுவரும் காசுகளை அவரவர்க்கென்றே ஒவ்வொரு குழியிற் போட்டு முளைக்கவைக்கலாம் கூடியவரை அதிகக் காசுகள் கொண்டுவருவதற்குப் பிரயாசைப்பட்டு பாருங்கள் என்று சொன்னான். இந்த மோசமான வார்த்தைகளைக் கேட்டவுடனே அந்தச் சிறுவர்கள் மெய்யென்றே நினைத்துப் பாலச்சந்திரனை நோக்கி அண்ணா! நீ சொல்வது சரிதான். நாங்கள் இந்தக் காசுகளைச் செலவழிக்கலாமென்று சொன்னது பைத்தியக்காரத்தனந்தான். நீ சொல்லுகிறபடியே நாங்கள் இன்று காசுகளைச் சம்பாதித்துக்கொண்டு வருகிறோம். எங்கள் தாய் தந்தைகள் மகா கருமிகள். அவர்கள் காசுகளை வெகுபத்திரமாக வைத்திருப்பார்கள் அவர்கள் ஏரற்[illegible] மறைத்து வைத்திருந்தாலுங்கூட நாங்கள் [illegible]யாவது பிரயாசைப்பட்டுத் திருடிக் கொண்டு

வந்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். அப்படியே செய்யுங்கள் சாயங்காலம் நான்கு மணிக்கெல்லாம் நீங்களெல்லோரும்என்னிடம் வந்துசேரவேண்டுமென்று சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் போய்விட்டான். அந்தச் சிறுபிள்ளைகளும் தங்கள் தங்கள் வீடுகளிற்போய்ச் சேர்ந்தார்கள்.

அதன்மேல் வீடுகளுக்குச் சென்ற சிறுபிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளில் தாய்தந்தையர் கடைக்குப் போகவோ வேறிடங்களுக்குச் செல்லவோ வெளியேறிய சமயம்பார்த்துச் சட்டி பெட்டிகளையும் பைகளையும் புரட்டிப்பார்த்து ஆங்காங்கே இருந்த காசுகளையெல்லாம திருடி வஸ்திரங்களில் முடிந்து பத்திரமாக மடியிற்சொருகி வைத்துக்கொண்டு நான்கு மணிக்கெல்லாம் ஒரு நிமிஷங்கூடத் தவறாமல் பாலச்சந்திரனிடம் வந்து சேர்ந்தார்கள். உடனே பாலச்சந்திரன் அவர்களை நோக்கி என்ன தம்பிகளே! நான் உங்களைப்போன்ற பேராசைக்காரர்களை எங்கும் கண்டதில்லை உங்களுக்காக நான் எவ்வளவோ பிரயாசைப் படுகிறேன். இதற்காக நீங்கள் எனக்கு சாதிக்கப் போகிறதென்ன? நீங்கள் வாங்கித்தின்னும் பக்ஷணங்களில்கூட எனக்குக் கொஞ்சம் கொடுக்கமாட்டீர்கள். நீங்கள் எப்படிச்செய்தாலும் சரி! நான் தர்மத்திற்கு பாடுபடுகிறவன் வாருங்கள் போகலாம் என்று அவர்களை அழைத்துக்கொண்டு முன்னே கூறிய தோட்டத்திற்கே போனான். சிறுபிள்ளைகளெல்லோரும் குபேர சம்பத்தை அடைந்தவர்களைப்போல வெகு உற்சாகமாக அவனுக்குப் பின்னே சென்றார்கள்

எல்லோரும் தோட்டதிற்கு போய்ச் சேர்ந்தவுடன் மணல் பரவிக்கிடக்கும் ஓரிடத்தில் பாலச்சந்திரன் உட்கார்ந்து பிள்ளைகள்எத்தனை பேரென்பதைக்கணக்கிட்டு ஒவ்வொருவருக்கும ஒவ்வொரு குழி தோண்டி இன்னாருடைய குழி இன்னாருக்குச் சொந்தம் என்பதைக் குறிப்பிட்டு

ஒவ்வொரு பையனிடத்திலும் இருந்த காசுகளை வாங்கி அவனவன் குழியில் போட்டு மேலே மணலைப் பரப்பித் தண்ணீரை ஊற்றிவிட்டுப் பையன்களை நோக்கி "தம்பி மார்களே! இனி நாம் இங்கே கூட்டம் போட்டுக்கொண்டு நிற்கலாகாது எவரேனும் கண்டால் நம்முடைய காசுக்கே மோசம் வந்துவிடும் சீக்கிரம் இவ்விடத்தை விட்டு நாம் போய்விடவேண்டும் நாளை உதயத்தில் எல்லோரும் வந்து சேருங்கள். காசுகளை மூட்டை கட்டிக் கொண்டு போகலாம்" என்று ஆசைவார்த்தைகூறி அவர்களை அழைத்துக்கொண்டு போய்விட்டான். பின்னர், அந்தப் பிள்ளைகளெல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று ஆகாரம் சாப்பிட்டு விட்டு, விளையாடுவதற்கு வெளியேறி மறு நாள் காசு மரத்திலிருந்து அதிகக் காசு கிடைக்கும். நாம் சுலபமாகக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையால் தங்கள் தங்களுக்குத் தெரிந்த பக்ஷணக்காரர்களிடத்தில் போய் 'ஐயா! நாளைக்கு ஒரு வழியில் எங்களுக்கு அதிகக் காசுகள் வரும் எவ்வளவு கடனானாலும் நாங்கள் கொடுத்துவிடுவோம். எங்களுக்கு இன்றைக்கு வேண்டிய பக்ஷணங்களை நீங்கள் கடனாக் கொடுங்கள்" என்று அளவற்ற பக்ஷணங்களை வாங்கித் தின்றுவிட்டு மகிழ்ச்சியால் விளையாடிக்கொண்டு திரிந்து, என் மானவுடன் வீடுகளிற்போய் போஜனமுண்டு 'நாளை நமக்கு அளவற்ற திரவியங்கிடைக்கும்" என்ற ஞாபகத்துடனே படுத்துக்கொண்டார்கள்

இவர்கள் செய்கை இப்படியிருக்க, பாலச்சந்திரன் என்ன செய்தானென்றால் சூரியன் அஸ்தமித்துக்கொஞ்சம் இருட்டானவுடனே பூனையைப்போல் வெளியேறி ஒருவருக்கும் தெரியாமல் அந்த தோட்டத்திற்குபோய் பையன்கள் நம்முடைய வலையில் நன்றாய்ச் சிக்கினார்கள் என்று மகிழ்ந்து, காசு போட்ட ஒவ்வொரு குழியையுந் தோண்டி ஒவ்வொன்றிலுமிருந்த காசுகளை யெல்லாம் ஒன்றைவிடாமலெடுத்துச்சேர்த்துத் துணியில் முடிபோ

ட்டான். பையன்கள் பேராசையால் அதிகக் காசுகளைக் கொண்டுவந்திருந்தபடியால் ஒரு மூட்டை காசுகள் சேர்ந்து விட்டன. பாலச்சந்திரன் நமக்கு இனிமேல் இரண்டு மூன்று மாதங்கள் வரை காசுக்கு பஞ்சமில்லை இஷ்டமானபடி பணச்செலவு செய்யலாம் என்று அந்தக்காசு மூட்டையைப் பத்திரமாக மடியில் கட்டிவைத்துக்கொண்டு அங்கே நன்றாகப் பூத்துக்காய்த்திருந்த செந்தொட்டியென்னும் பூனைக்காய்ஞ்சொரியென்னும் செடிகளை உடம்பிற்படாமல் துணியைக் கையில் சுற்றிக்கொண்டு பக்குவமாக வேரோடு பரித்து வந்து ஒவ்வொரு குழியிலும் வரிசையாக நட்டுத்தண்ணீர் ஊற்றி விட்டு, பயல்கள் பாடு நாளைக்குத் திண்டாட்டந்தான் என்று வீட்டிற்குப் போய் காசுகளைப் பத்திரப்படுத்திவிட்டுப் படுத்துக்கொண்டான்.

மறு நாள் பொழுது புறப்படுவதற்கு முன்பாகவே ஐந்து மணிக்கெல்லாம் பையன்கள் எழுந்து ஓடிவந்து பாலச்சந்திரனைத் தட்டியெழுப்பினார்கள் அவனுடனே எழுந்து தம்பிகளே! இன்றைக்கு உங்களுக்கு நல்ல யோகந்தான். ஒவ்வொரு செடியிலும் காசுகள் அதிகமாகவேயிருக்கும் என்றுசொல்லி அவர்களை அழைத்துக்கொண்டுபோய் தான் நட்டுவைத்த செடிகளை அவர்களுக்கு காட்டி தம்பிகளே! இந்தச்செடிகள் வெகு விநோதமாயிருக்கின்றன இதற்கு முன் முளைத்த செடிகளெல்லாம் இவைகளைப்போல் இல்லை. ஆதலால் இவற்றில்காசுகள் அதிகமாகவேயிருக்குமென்று நான் நம்புகிறேன். நான் கிட்டவரமாட்டேன். அந்தச்செடிகளைத்தொடவே மாட்டேன். நானும் உங்களுக்கு ஊடே திரிந்தால் காசுகளை எடுத்துக்கொண்டேனென்று நீங்கள்சொல்வீர்கள் நீங்களே போய் அவரவர்கள் செடிகளைப் பறித்து வேரில் விளைந்திருக்கும் காசுகளை வேர்க்கடலை தோண்டி எடுப்பதுபோல் வாரி எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னான் இதைக் கேட்டதும் அந்தப் பேதைப் பிள்

ளைகளெல்லோரும் பாலச்சந்திரனை நோக்கி என்ன அண்ணா இப்படிச்சொல்லுகிறாய். நீயே காசுமரத்தைமுளைக்க வைத்தாய் அப்படியிருக்க உன்மீது எங்களுக்கு அவ நம்பிக்கை ஏற்படுமா? நீ வைத்தவீடும் விளக்கும்தானே நீ இல்லாவிட்டால்எங்களுக்கூச்சிறப்பேது. தயவுசெய்து நீயே உன் கையினால் காசுகளைத்தோண்டி யெடுத்துஎங்களுக்கு கொடு. உன்னுடைய அஸ்த விசேஷம் மெதத வும் நல்லத. ஆதலால் நீதான் முதலில் பணம் பறித்து கொடுக்கவேண்டும் என்று கூறினார்கள் அந்தச் செடிகளின் சமீபத்திற்சென்றால் ஒரு சங்கடம் உண்டாகுமென்பது பாலச்சந்திரனுக்கு தெரியுமாதலால் அவன் ஐயோ! நான் கிட்டவரமாட்டேன் ஏதாவது கொஞ்சம் காசுகுறைந்தாலும் நீங்கள் என் தலையில் பழியைப் போட்டு விடுவீர்கள் உங்களுக்கு இஷ்டமிருந்தால் நீங்களே செடிகளின் வேரைப்பறித்துக்காசுகளை எடுத்துக் கொள்ளுங்கள் இல்லாவிட்டால் சும்மாவிருங்கள் எனறு கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான்.

அதன் மேல் அந்தப் பையன்கள், இவன் தான் ஓரேபிடிவாதமாய்ச் சொல்லுகிறானே; நாம் என்னசெய்கிறது நாமாவது போய்க்காசுகளை தோண்டிஎடுப்போம என்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் செடிகளின்பக்கத்தில் போய் உட்கார்ந்துவேரைப்பறித்தார்கள் அப்போது அச்செடிகளின் இலைகளெல்லாம் அவர்களுடைய தேகத்திலும் காலிலும் கையிலும உராய்ந்து கொண்டிருந்தன. பூனைக்காய்ஞ்சொறி நமைச்சலெடுக்ககூடியதாதலால் அவர்களுக்குக் கொஞ்சம நமைச்சலெடுக்கத் தலைப்பட்டது அந்த நமைச்சலோடு அவர்கள் உடம்பைச் சொறிந்துகொண்டே வேர் முழுதும் தோண்டிப் பார்த்தார்கள் அவர்களுக்கு ஒரு பைசாகூட அகப்பட வில்லை ஆதனால் அவர்கள் முகம் வாடிப்போய் பாலச் சந்திரனை நோக்கி என்ன அண்ணா! ஒருகாசுகூடஅகப் படவில்லையே! விதைக்குப் போட்ட காசுகள்கூடஅகப்

படவில்லையே என்று வருத்தத்தோடு கேட்டார்கள். அவன் இதென்ன நீங்கள் சொல்லுகிறது அதிசயமாயிருக்கிறதே. செடிகளில் காசுகள் விளையாமற்போனதற்கு காரணமென்ன? என்று ஓடிவந்து ஒவ்வொரு செடியையும் உற்று நோக்கிருன். அவற்றைப் பார்த்ததும் ஓ! ஓ!! சரி! சரி!! நான் சங்கதி தெரிந்துகொண்டேன். தப்பிதம் உங்கள் பேரில்தானிருக்கிறது அதனுல் தான் செடிகளும் வேறுவிதமாகவே உண்டாகியிருந்கின்றன. இதற்கு முன்னே காசு விளைத்த செடிகளெல்லாம் நல்லவிதமாக செழித்திருந்தன. இந்தச்செடிகளோ வறண்டுபோய்ச் சிறுமுட்கள் நிறைந்தனவாயிருக்கின்றன. இவைகள் சொத்தைச்செடிகள். நீங்கள் எங்கேயோ கிடந்த செல்லாதபழங்காசுகளைத்திருடிக்கொண்டுவந்திருக்கிறீர்கள் அதனுல் தான் இந்தச் சொத்தைச் செடிகளுண்டாய் விட்டன. விதைபோட்ட காசெல்லாம் செடி மயமாகவே மூளைத்துவிடுமாதலால் அவைகளும் இல்லாமற்போயின. அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை நீங்கள் தேய்ந்த காசுதலைக் கொண்டுவந்துபோட்டதால் இப்படிப் பலனில்லாமல் போய்விட்டதே என்பதைப் பற்றித்தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது முன்னே சிலபையன்கள் இப்படித்தான் செல்லாக் காசுகளைப் போட்டுப் பலனை இழந்துபோனுர்கள். இனி என்ன செய்கிறது. நீங்கள் வீட்டுக்குப் போயிருங்கள் நாளைக்கு நல்ல காசுகளைக் கொண்டுவந்து மூளைக்கப்போடலாம் என்று சொன்னுன் இதற்குள் பையன்களுக்குப் பூனைக்காய்ஞ் சொறி பட்டதால் நமைச்சல் அதிகமாய்விட்டது. அதனுல் அவர்கள் கண்டவிடமெல்லாஞ் சொறிந்து அது படாத விடங்களிலும் சுணையைப் பூசிக்கொண்டார்கள். எங்கும் அடங்கா நமைச்சலுண்டாய்விட்டது. அவர்கள் தேய்க்கத் தேய்க்க உடம்பெங்குந் தடித்துப்போய் வேதனை அதிகமாகிவிட்டது அதனுல் அவர்கள் முகத்தைச் சுளித்து விம்மலும் பொருமலுமாய் வறட்டு வறட்டென்று சொறிந்துகொண்டே பாலசந்திரனை நோக்கி

அப்பா! அந்தக் காசு தொலைந்தால் தொலைகிறது. அந்தச் செடி பட்டதால் உடம்பெல்லாம் பொறுக்க முடியாத நமைச்சலெடுக்கிறதே. எங்களால் பொறுக்க முடியவில்லையே! இதற்கென்ன செய்கிறது! என்று அழுதுகொண்டே கேட்டார்கள்

அதற்குப் பாலசந்திரன் அப்பா தம்பிகளே! அந்தச் சொத்தைச் செடிகள் இப்படித்தான் இழவு கூட்டும் நீங்கள் சீக்கிரம் வீட்டுக்கு ஓடிப்போய்க் கொஞ்சம் மிளகாயை அரைத்து மேலே பூசிக்கொள்ளுங்கள். உடனே இந்த நமைச்சல் தீர்ந்துவிடும். காரத்திற்குக் காரந்தான் சத்துரு விரைவாக வீட்டுக்கு ஓடுங்கள். நம்முடைய இரகசியத்தை மாத்திரம் எவரிடத்திலுஞ் சொல்லிவிடாதீர்கள். சொன்னால் உதைதான் கிடைக்கும் என்று கூறினான் இதைக் கேட்டவுடனே அந்தப் பையன்களெல்லாம் இதென்ன பேரிழவாயிருக்கிறதே. நாம் சும்மாவிருந்து தொலையாமல் இந்த மூதேவிப்பயல் வார்த்தையைக் கேட்டுக் காசுசம்பாதிக்கவந்து மோசத்திற்குள்ளானோமே பெரிய சனியன் பிடித்துக்கொண்டதே என்று அழுதுகொண்டே ஒவ்வொருவரும் தனித் தனியே பிரிந்து வாலில் ஓலையைக் கட்டிவிடப்பட்ட கழுதையைப்போல மருண்டு விரைந்தோடி வீடுகளிற் புகுந்து. பாலச்சந்திரன் சொன்னபடியே மிளகாயை அரைத்து உடம்பெல்லாம் பூசிக்கொண்டார்கள் ஐயோ அவர்களுக்கு வேதனைக்குமேல் வேதனையாய் விட்டது அவர்கள் சொறிந்து சொறிந்து உடம்பில் இரத்தம் பீரிட்டுக் கொண்டிருந்தபடியால் அதில் மிளகாய்க்காரம் சேர்ந்தவுடனே நமைச்சலோடு எரிச்சலும் சேர்ந்து

கொண்டு பையன்களுக்குச் சகிக்க முடியாத துன்பமுண்டாக்கிவிட்டது அதனால் இவர்கள் ஐயையோ! அப்பா! அம்மாடி! உஸ்! உஸ்! என்று கால்கைகளை உதறித் துள்ளிக்கொண்டு, கதற ஆரம்பித்தார்கள். வீட்டுக்கு வீடு பையன்களின் கூச்சல் அதிகமாயிருந்தது. அச்சமயத்தில் வீடுகளில் காசுகள் காணமற் போனதைப்பற்றி அவர்கள் தாய் தந்தையர்கள் பையன்கள் தான் அவற்றை எடுத்திருக்கக்கூடும். அவர்கள் வரட்டும். நன்றாக அவர்களை உதைக்கவேண்டும் என்று கடுங்கோபத்துடனிருந்தபடியால் பையன்கள் இவ்வாறு கதறியதைக் கேட்டவுடனே அவர்கள் அந்தக் கோபத்துடனே ஓடிவந்து அடே திருட்டுப் பயல்களா! காசுகளை வீட்டில் திருடிக் கொண்டுபோனதல்லாமல் எங்கேயோ போய்விழுந்து அவஸ்தைப்பட்டுக்கொண்டுவந்துகதறுகிறீர்களா? என்று வேதனையோடு வேதனையாய் அந்தப் பையன்கள்முதுகில் சுருளச்சுருளக் கையினால் நாலு அறை வைத்தார்கள். நமைச்சலும் எரிச்சலும் போதாமல் இந்த அடிகளும் விழவே பையன்கள்பாடு பெரும்பாடாய்விட்டது அவர்கள் எல்லோரும் கூவேகூவென்று கதறினார்கள். அப்பொழுது எரிகிற நெருப்போடு காற்றுஞ்சேர்ந்தது போல அந்தப்பையன்களுக்கு பக்ஷணம் கடன்கொடுத்த கடைக்காரர்கள் வந்து அந்தப் பையன்களிடத்தில் அடே! பசங்களே! இன்றைக்கு ஏதோ ஏராளமான காசுகள் வருகின்றனவென்றும் அவற்றைக் கொடுத்து விடுவதாகவும் சொல்லி நேற்று அளவற்ற பக்ஷணங்களை கடனாக வாங்கித் தின்றீர்களே! எங்கே காசு? என்று கேட்டார்கள் இதைக்கேட்டதும் பையன்களுடைய

தாய் தந்தையர்க்கு முன்னிலும் அதிகமாகக் கோபம் வந்துவிட்டது அதனாலவர்கள் இந்தப்பிள்ளைகள் காசுகளைத் திருடிக்கொண்டு போகவேண்டுமென்று உறுதி செய்துக்கொண்டே அந்தத்தைரியத்தால் நேற்று பக்ஷணம் வாங்கித் தின்றிருக்கிறார்கள். அதன்மேல் காசுகளைத் திருடிக்கொண்டுபோயிருக்கிறார்கள் அப்படி அவற்றைக் கொண்டுபோயும் இந்தக் கடைக்காரர்களுக்குக் கொடாமல் வேறு செலவு செய்திருக்கிறார்களென்று நினைத்து மேலும் மேலும் பையன்களை மொத்துமொத்தென்று தாக்கினார்கள். அதைக் கடைக்காரர்கள் பார்த்து ஐயோ! சிறுபிள்ளைகளை ஏன் அடிக்கிறீர்கள் குழந்தைகளாயிருந்தால் ஏதோ ஒரு சமயத்தில் காசுகளை எடுத்துக்கொண்டு போகிறது வழக்கந்தானே. அதற்காக இப்படி அடிக்கலாமா? என்று அந்தப் பிள்ளைகளின் தாய் தந்தைகளை நோக்கிக் கூறினார்கள். •

கடைக்காரர்கள் இவ்வாறு சொன்னதைக் கேட்டவுடனே அவர்களுக்கு வயிற்றெரிச்சல் அதிகமாய்விட்டது. அதனால் அவர்கள் கடைக்காரர்களைக் கடுகடுப்புடன் பார்த்து, நீங்கள் மெத்த யோக்கியர்கள்தாம் வாயை மூடுங்கள். சுத்த அயோக்கியப் பயல்கள். நீங்கள்தாம் பக்ஷணங்களைக் கடனாகக்கொடுத்து வீட்டில் காசுகளைத் திருடிக்கொண்டு வரும்படி அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்திருக்கிறீர்கள் எங்களுடைய அனுமதியில்லாமல் எப்படி நீங்கள் குழந்தைகளுக்குப் பக்ஷணங்கொடுக்கலாம் பிழைக்கவழி தெரியாத சில மோசக்காரக் கழுதைகள் இப்படித்தான் ஊசிப்போன மூசை உண்டைக்கடை வைத்துக்கொண்டு பிள்ளைகளை ஏமாற்

றிக்கொடுத்துவிடுகிறது வழக்கம். நீங்கள் எங்கள்பிள்ளைகளுக்குத் திருட்டுப் பழக்க வைத்தது மல்லால் கடன் கேட்கவும் வந்து விட்டீர்களா? மோசக்காரக் கழுதைகளே! இங்கே நிற்க வேண்டாம் நிற்பீர்களேயானால் செருப்படியும் துடைப்பக்கட்டைப்பூஜையும் கிடைக்கும் மரியாதையாக ஓடிப்போய்விடுங்கள். என்று தாறுமாறாகப்பேசினார்கள் கடைக்காரர்கள்பக்ஷணங்கொடுத்து நஷ்டப்பட்டதுமல்லாமல் இந்த ஏச்சான பேச்சையும் கேட்பார்களா? இப்படி அவர்கள் வாய்க்கு வந்தபடி திட்டியவுடனே கடைக்காரர்களுக்தும் கோபம் வந்துவிட்டது அவ்வாறு கோபம் மூளவே அவர்களும் வாய்போர் தொடக்க வாரம்பித்துப் பையன்களுடைய தாய்தந்தையர்களைப்பார்த்து எடுத்த எடுப்பிலேயே புத்தியில்லாத நாய்களே! என்ன கொஞ்சமும் மரியயாதையில்லாமல் பேசுகிறீர்களே! நாங்கள் ஏதோ பெரிய மனுஷாள் வீட்டுப்பிள்ளைகளென்று நினைத்துஅவர்களுக்குப் பக்ஷணங்கொடுத்தோம்; நீங்கள் இவ்வாறு பன்னாடைக்கழுதைகளாயிருப்பீர்களென்று தெரிந்திருந்தால் நாங்கள் ஒன்றும் கொடுக்கவேமாட்டோமே; நாங்கள் நஷ்டப்பட்டதுமல்லாமல் திட்டுமா கேட்கவேண்டும்; இனி நீங்கள மரியாதையாகப் பேசுங்கள்; மரியாதைகெட்டுப் பேசுவீர்களேயானால் பற்களை உதிர்த்துவிடுவோம்; ஜாக்கிரதை என்று மீசைகளை முறுக்கிக்கொண்டு துள்ளித் துள்ளிப் பேசினார்கள். பையன்களுடைய தாய்தந்தையர்களுக்கு அவ்வளவுசகிக்குமா? பலகாரக்கடைக்காரர்களென்றால் யாரும் கேவலமாகவே மதிப்பார்கள். அப்படியிருக்க அவர்களை வந்து தூஷணையான வார்த்

தைகளைப் பேசிவிட்டால் ஊரார் அவர்களை என்னபாடு தான் படுத்தமாட்டார்கள். உடனே அந்த வீட்டுக் காரர்களுக்குக் கோபம் மூண்டுவிட்டபடியால் செருப்புக் களையும் துடைப்பங்களையும் அவர்கள் கையிலெடுத்துக் கொண்டு கடைக்காரர்களைச் சாடிவிட்டார்கள் கடைக் காரர்களும் சும்மாவிடவில்லை அவர்கள் தலைமயிரைப் பற்றி இழுத்து மல்யுத்தஞ்செய்ய வாரம்பித்துக் கைக ளால் குத்தியும் தட்டியும் அறைந்தும் அவர்களைப் படா தபாடெல்லாம் படுத்திவிட்டார்கள். தெருவில் கலகம் அதிகரித்துவிட்டது. அடி உதை என்ற சப்தங்களும் பல தூஷணையான வார்த்தைகளும் ஓங்கிவிட்டன

இவ்வாறு தெருச்சண்டை அதிகரிக்கவே அங்கே இப்பேர்ப்பட்டகேசுகள் எப்பொழுது அகப்படுமென்று உலாவிக்கொண்டு திரிந்த போலீஸ் புலிகள் ஓடிவந்தார் கள். அவர்கள் வந்தவுடனே தங்கள் மேட்டிப்படியே அடே! இங்கே என்ன கலகம்? இந்த ஊரில் தெருச் சண்டை மிகுந்து போய்விட்டது. கலகக்காரக் கழு தைகள் அதிகமாய்விட்டன். கழுதைகளைப் பிடி! பிடி! அடி! அடி! கெட்டு! கெட்டு! தாட்பூட், தஸ்புஸ் என்று அந்தக் கடைக்காரர்களையும் வீட்டுக்காரர்களையும் பிடித் துத் தள்ளிப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் ஒரு அறைக்குள் தள்ளி அடைத்துவிட்டு அதிகாரிக ளிடம் அவர்கள் செய்த தெருக்கலகத்தைத் தெரிவித் தார்கள். அதிகாரிகள் நடந்தவற்றையெல்லாம் விசா ரித்துஇரண்டுகக்ஷியாரின்மீதும் குற்றத்தைஸ்தாபித்து ஒவ்வொருவருக்கும் பேருக்கு ஐந்துரூபாய் வீதம் அப ராதம் விதித்துக் கடைக்காரர்களுக்கு வீட்டுக்காரர்கள்

அவர்களுடைய பிள்ளைகள் பக்ஷணங்கள் வாங்கித்தின்ற வகையில் கொடுக்கவேண்டிய காசுகளைக் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார்கள். வீட்டுக்காரர்கள் இதென்ன அநியாயம்! நம்முடைய பிள்ளைகளால் பேரிழவு வந்து விழுந்ததே என்று கடைக்காரர்களுக்குக் காசுகளைக் கொடுத்து, அபராதத் தொகையையும் நியாயஸ்தலத்தில் கட்டிவிட்டு ஆத்திரத்தோடு வீடுபோய்ச்சேர்ந்தார்கள் கடைக்காரர்களோ இதென்ன கொடுமை! கடன் கேட்கப்போய்க் காலசனியன் தொடர்ந்ததே என்று விம்மலும் பொருமலுமாய் முடிப்பையவிழ்த்து அபராதத் தொகையைச்செலுத்திவிட்டு அங்கலாய்ப்போடு தங்கள் கடைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

மேற்கூறியபடி சிறுபிள்ளைகளின் தாய்தந்தையர்கள் வீடுபோய்ச் சேர்ந்தவுடன் தங்கள் பிள்ளைகளால் காசு போனதுடன் தெருச்சண்டையும் தண்டமும் ஏற்பட்டதைப்பற்றி பெருங்கோபங்கொண்டு மீண்டும் அப்பிள்ளைகளைத் தங்கள் பலங்கொண்டமட்டும் அடித்துப் புரட்டிவிட்டார்கள். பிள்ளைகளோ பாலச்சந்திரனால் நமைச்சலும் எரிச்சலும் அடைந்ததோடு நாலைந்துமுறை உதையும் பட்டதனால் தாங்கமுடியாத வேதனையை அடைந்து தாங்கள் காசுமரம் முளைக்கவைத்ததையும் வெளியிற் சொல்லாமல் அடக்கி நாலைந்துதினங்கள்வரை வீட்டைவிட்டு வெளியேறாமலிருந்து பின்பு வெளியேறி அப்பா அந்தத் தடியன் சொல்லைக்கேட்டுக் காசுமரம் வைக்கப்போய் நாம் பட்டபாடு போதும்; இனிமேல் அந்த மூதேவிப் பயலோடு சேரவேகூடாது என்று தீர்மானம் செய்துகொண்டு விளையாடித்திரிந்தார்கள். அப்

போது பாலச்சந்திரன் அவர்களைக் கண்டு 'ஆசாமிக ளுடைய நிலைமை எப்படியிருக்கிறது பார்ப்போமென்று அவர்கள் சமீபத்திற்சென்று தம்பிமார்களே! நீங்கள் அப்பால் ஏன் நல்ல காசுகளை எடுத்துக்கொண்டு வர வில்லை என்று கேட்டான் இவனைக் கண்டவுடனே அந் தச் சிறுபிள்ளைகள் எமனைக் கண்டதுபோல் பயந்து அப்பா! போதும் போதும்! உன்னுடைய சவகாசம் வேண்டவே வேண்டாம் என்று சொல்லி அவ்விடத்தில் நில்லாமல் காற்றாய்ப் பயந்து வீட்டுக்கு ஓடிப்போய்விட் டார்கள். அதன்மேல் பாலச்சந்திரன் சரி; இனிமேல் பையன்கள் நம்மிடம் நெருங்கவேமாட்டார்கள் எங்கே அவர்கள் மூளைக்கப்போட்ட காசுகளை நம்மிடம் கேட் கிறார்களோ நாம்செய்த சூதைத்தாய்தந்தையர்களிடம் சொல்லிவிடப் போகிறார்களோ என்று சந்தேகங்கொண் டிருந்தோம். அப்படியெல்லாம் இவர்கள் ஒன்றுஞ் செய்ததாகத் தெரியவில்லை. இவர்கள் நல்ல உதைப் பட்டிருப்பார்கள். அதனால்தான் இவ்வாறு மிரண்டு ஓடுகிறார்கள். நம்முடைய சங்கதியை இவர்கள் வெளிப் படுத்தியிருந்தாலும் அதற்கும் இரண்டு உதைதான் கிடைக்கும். அதை உத்தேசித்தே இவர்கள் நம்மு டைய இரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கமாட்டார் கள். இவர்கள் இப்பொழுது ஓடிவிட்டது நமக்கு நன் மைதான் என்று மிகுந்த சந்தோஷத்துடன் வீட்டுக்குப் போய்விட்டான்.

ஸ்டார் பிரஸ், ஹெட் ஆபீஸ், கும்பகோணம்.

உ

SRIRAMAJAYAM.

KUMBAKONAM,

T, K, K. GOVILKE & BRS.,

NO I. "STAR DIARY"

for 1927.

6×4 with flap & pencil As, 10.

do without flap & pencil ,, 8.

குப்பகோணம்

T. K. K. கோவில்கர் & பிரதஸ்.,

1927] நெ.1 "ஸ்டார் டைரி" [1927

6×4 சயிஸ் பென்சல் உள்பட அணு 10.

ஷை பென்சல் இல்லாமல் அணு. 8.

Apply to:=

The Manager,

Star Press, Head Office

Kumbakonam.